04.02.2026

IDOP.No. 25/2017

**எ.ம.சா.1 – ஆண்ட்ரூஸ் பிரான்சிஸ் சேவியர்**

**<u>மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை :–</u>**

நானும் மனுதாரரும் காதலித்து திருமணம் செய்துகொண்டோம் என்றால் சரிதான். நான் மென்பொருள் பொறியாளராக உள்ளேன். நான் சென்னையில் உள்ள நிறுவனத்தில் வேலை செய்தேன். திருமணம் ஆன பிறகு திருச்சியில்தான் நாங்கள் வசித்தோம். பின்னர் சென்னைக்கு சென்றோம். என் தகப்பனாருக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். முதல் மனைவி இறந்தபிறகு இரண்டாவது திருமணத்தை செய்து கொண்டார். என்னுடன் பிறந்தவர்கள் இரண்டு மூத்த சகோதரர்கள், ஒரு சகோதரி. திருமணத்திற்கு பிறகு நாங்கள் அனைவரும் கூட்டுக்குடும்பமாக இருந்தோம் என்றால் இல்லை. திருமணத்திற்கு பிறகு நாங்கள் தனி வீட்டிலும், என் பெற்றோர் தனி வீட்டிலும் வசித்து வந்தார்கள். நான் சொல்வது தவறு என்றாலும், ஒரு வீட்டில் பின்பக்கம் உள்ள இரண்டு அறைகளில் அவர்கள் வசித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. அந்த இரண்டு அறைகளில் ஒரு அறை பொருட்கள் வைப்பதற்கும், ஒரு அறையில் பாத்ரூம் மற்றும் டாய்லட் உள்ளதால் அதை பயன்படுத்தினார்கள் என்றால் சரிதான். அந்த அறையை என் அப்பாவிற்கு கொடுத்து வைத்திருக்கிறோம் என்றால் சரியல்ல. அந்த அறையை என் தகப்பனார் பயன்படுத்தினார் என்றாலும், நானும் என் மனைவியும் ஹாலில்தான் தங்கியிருந்தோம் என்றாலும் சரியல்ல. திருச்சியிலிருந்து நான் சென்னை செல்லும்

சமயத்தில் எனக்கு என்ன சம்பளம் என்று சொன்னால் முப்பத்து மூன்றாயிரம் ரூபாய். சென்னையில் நாங்கள் வாடகை வீட்டில்தான் இருந்தோம். வாடகை ரூபாய் பத்தாயிரம். நான் ஏற்கனவே கடன் வாங்கிய கடனுக்கான மாதாந்திர தொகையையும், அந்த சம்பளத்திலிருந்துதான் செலுத்தி வந்தேன் என்றால் சரிதான். குடும்ப செலவிற்கு என்னுடைய சம்பளம் போதாத காரணத்தினால் என் மனைவி வீட்டிலிருந்து தான் மாதாமாதம் பணம் அனுப்பினார்கள் என்றால் சரியல்ல.

**(குறுக்குவிசாரணையின் தொடர்ச்சி வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

CHRISTOPHER M

Digitally signed by CHRISTOPHER M
Date: 2026.02.04 18:35:59 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.